சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 16.02.2024 SC.18/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர்.முகமது அசாருதீன் | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.7**

---

முதல் விசாரணை

நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் மயக்கவியல் நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.08.2016 அன்று மாலை 6.00 மணியளவில் அரசு மருத்துவமனை உத்தமபாளையத்தில் பணியில் இருந்தபோது திரு.மாரிமுத்து, த/பெ.முனியாண்டி, மணியக்காரன்பிள்ளை தெரு, அனுமந்தன்பட்டியைச் சேர்ந்தவர் மருத்துவமனைக்கு வந்து தன்னை அனுமந்தன்பட்டி சந்தைக்குஅடியில் சுமார் 5.30 மணியளவில் 08.08.2016 அன்று ஒருவர் அரிவாளால் தாக்கினார் என்றார். அவரை பரிசோதித்தபோது கழுத்தின் பின்பகுதி மேலோட்டமான வெட்டுக்காயம்-1, இடது மணிக்கட்டில் எலும்பு தெரியும் வகையில் 10x3x2 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்கா-2, இடது முன்னங்கையில் 10x2x3 செ.மீ அளவுள்ள ஒரு வெட்டுக்காயம்-3, இடது தொடையில் 6x4x3 செ.மீ அளவுள்ள ஒரு வெட்டுககாயம்-4 இருந்தது. அவருக்கு முதலுதவி அளித்து மேல்சிகிச்சைக்காக க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு பின்னர் அவருடைய காயங்களை மருத்துவ ஆய்வு செய்து அவருக்கு கொடுங்காயம் என காயச்சான்றிதழ் வழங்கினோம். அது அ.சா.ஆ.3. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒழுங்கற்ற இரும்பு தகரத்தில் மேல் விழுந்தால் இடது கையில் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அதேபோல் கீழே விழும்போது தகரம் இருந்தால் கால்களில் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பின்கழுத்திலும் தகரத்தின் மேல் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவரை மேல்சிகிச்சைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். எலும்பு

முறிவு என்பதால் கொடுங்காயம் என குறிப்பிட்டுள்ளேன். எக்ஸ்ரே காயம்பட்ட நபருக்கு க.விலக்கு அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்டது. என் மூலமாக எக்ஸ்ரே எதுவும் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்குககொடுங்காயம் இல்லை என்றும், காவல்துறையினா் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 16.02.2024 SC.18/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீத்தாலட்சுமி | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.8**

---

முதல் விசாரணை

நான் சம்பவம் நடக்கும்போது அனுமந்தன்பட்டியில் குடியிருந்து வந்தேன். தற்சமயம் கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரி என் உடன் பிறந்த சகோதரர். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**

கடந்த 08.08.2016ம் தேதி மாலை 5.30 மணிக்கு அனுமந்தன்பட்டி அகமுடையார் சங்க கட்டிடம் அருகில் உள்ள அசோக் பேன்சி கடை முன்பு எனது பெரியம்மா மகன் மாரிமுத்து நின்றிருந்தபோது அங்கு எனது அண்ணன் சதீஸ் என்ற சதீஸ்குமார் என்பவர் தன் கையில் அரிவாளுடன் வந்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும் மாரிமுத்து பலத்த காயத்துடன் உத்தமபாளையம் மருத்துவமனையில் சேர்த்ததாக கேள்விப்பட்டேன் என போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரி உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.